செய்தி வெளியீடு எண்:543 நாள் : 29.10.2015

தமிழக மக்கள் ஆயுத பூஜை மற்றும் அதனைத் தொடர்ந்த விடுமுறை நாட்களை தங்கள் சொந்த மண்ணில் கொண்டாடும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, கடந்த நான்கு ஆண்டுகளாக அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் சிறப்புப் பேருந்துகள் சீரிய முறையில் இயக்கப்பட்டு, மக்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது.

2. அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டும் ஆயுத பூஜையை முன்னிட்டு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு, மக்களுக்கு சீரிய போக்குவரத்து வசதியை அரசு போக்குவரத்துக் கழகங்களால் ஏற்பாடு செய்யப்பட்டது.

3. அதன் அடிப்படையில், சென்னை கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் மற்றும் மாநிலத்தின் இதர இடங்களிலிருந்து, 17.10.2015 அன்று முதல் 26.10.2015 வரை கூடுதலாக இயக்கப்பட்ட சிறப்பு பேருந்துகளின் எண்ணிக்கை 6,558. இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டைக் காட்டிலும் 3,266 கூடுதல் ஆகும்.

4. மேற்கண்ட தேதிகளில் போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.9.69 கோடி வருமானம் இதன் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும், ரூ.4.89 கோடி வருமானம் கூடுதல் ஆகும்.

5. மேலும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் ஏனைய தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில், மேற்கண்ட தேதிகளில் முன்பதிவு செய்து பயணம் செய்தவர்களின் எண்ணிக்கை 1,38,678. அதன் மூலம் கிடைத்த வருமானம், ரூபாய் நான்கு கோடியே அறுபத்து ஒன்பது இலட்சம் (ரூ.4.69 கோடி) இது கடந்த ஆண்டைக்காட்டிலும், ஒரு கோடியே ஒன்பது இலட்சம் (ரூ.1.09 கோடி) கூடுதல் வருமானம் ஆகும். மேலும், 28,876 முன்பதிவு பயணிகள் கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு கூடுதலாக பயணம் செய்துள்ளனர்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9